**Arimaa Nokku Journal** **ISSN: 2320-4842**
**(UGC Care Group-I Journal)** **Vol-18 No. 04 October–December 2024**

# கவிஞர் கண்ணதாசன் கவிதைகளில் சங்க இலக்கியச் செய்திகள்

## ஆய்வுச்சுருக்கம்

[1]**திருமதி.ந.விஜயலட்சுமி,** முனைவர் பட்ட ஆய்வாளர்
https://orcid.org/0009-0002-9880-1350
*அ **முனைவர் செ. மகேஸ்வரி,** உதவிப் பேராசிரியர்
*1தமிழ்த்துறை, கலை மற்றும் மானுட அறிவியல், மீனாட்சி உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், நிகர்நிலைப் பல்கலைக்கழகம், கே.கே.நகர், சென்னை-78.

சங்க இலக்கியப் பாடலான குறுந்தொகையில், தலைவன் களவுக் காலத்தில் தன்னுடன் மகிழ்வாக இருந்த காலங்களைத் தலைவி எண்ணி, பிரிவுற்ற காலத்திலும் மகிழ்வாக தலைவனுடன் பழகிய சூழலைத் தலைவி நினைத்து வருந்தாது இருந்தாள் என்பதைச் சங்க அகப்பாடல்கள் பலவற்றில் காணலாம். இதனையே கவிஞர் கண்ணதாசனும் தலைவனோடு இருந்த சூழலில் மழைநீர் தேங்கி இருந்த இடமானது மகிழ்ச்சி தரும் தீர்த்த நீராக இருந்ததால் அங்குள்ள இயற்கை அழகினால் தலைவனோடு இருந்த நினைவலைகள் பிரிவைப் பெரிதுபடுத்தவில்லை என்கிறார். சங்க இலக்கிய ஐங்குறுநூற்றுப் பாடலில் தலைவன் தலைவி பிரியாது நீடூடி வாழ வாழ்த்துகிறாள். கண்ணதாசனும் எல்லா பாதியாய் பங்குகொண்டு தலைவன் தலைவி நீடூடி வாழ தோழி வாழ்த்துவதாகக் குறிப்பிட்டுள்ளார். இறைவன் இயற்கையோடு இணைந்திருப்பவன் என்பதை சங்கப் பரிபாடல் எடுத்துக்காட்டுவது போலக் கவிஞர் கண்ணதாசனும் தனது கவிதையில் கடவுளும் இயற்கையின் உட்பொருளாக காண்பதுபோல, கண்ணதாசனின் கவிதைகளிலும் முருகப்பெருமானின் ஆறுபடை வீடு பற்றிக் கண்ணதாசன் கவிதைகளோடு ஒத்துப் போகின்றது. புறநானூற்றில் போரின் விளைவுகள் பற்றி வலியுறுத்தி போரைத் தடுத்து நிறுத்தும் செயல்கள் சொல்லப்படுவதுபோல கவிஞரின் கவிதைகளில் வியட்நாமை அமெரிக்கப்படைகள் தாக்கியபோது ஏற்பட்ட அழிவுகளைச் சுட்டிக்காட்டுகிறார்.

**தரவுச் சொற்கள்:** தலைவன், தலைவி, செவிலி, தோழி, களவு, இயற்கை,காதல்,அகம், புறம், சிவன், முருகன்,போர், விளைவுகள், புறத்திணைகள்

### முன்னுரை

கவிஞர் கண்ணதாசன் கவிதைகள் எக்காலத்திற்கும் ஏற்ற வகையில் சமூகத்திற்கு முக்கியப் பங்களிப்பாக இருந்து வருகின்றது. அந்த வகையில் சங்க இலக்கியத்திற்குப் புத்துயிர் அளிக்கும் வண்ணம் கவிஞரின் கவிதைகளில் மிளிரும் சங்க இலக்கியக் கருத்துகள் இக்காலத்திற்கும் பொருந்துவதாகக் காணமுடிகிறது. சங்க இலக்கியப் பாடல்களான குறுந்தொகை, ஐங்குறுநூறு, பரிபாடல், புறநானூறு, திருமுருகாற்றுப்படை மற்றும் சங்க இலக்கியப் புறப்பாடல்களில் காணப்படும் புறத்திணைக் கருத்துகளையும் எடுத்துக்கொண்டு கவிஞர் கண்ணதாசனின் பாடல்களில் காணப்படும் செய்திகளை இக்கட்டுரையில் காண்போம்.

**குறுந்தொகை**

சங்க இலக்கிய எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான குறுந்தொகையில் அகப்பொருள் பற்றிய செய்திகள் காணப்படுகின்றன. அவற்றில் பெருமகள் உரைத்தல் என்பது தலைவி, தான் தலைவனைத் திருமணம் புரியும் வரை வருந்தாது இருந்ததற்கான காரணத்தைப் தோழிக்கு உரைத்தலாகும். இதனை,

**"மட்டம் பெய்த மணிக்கலத் தன்ன**
**இட்டுவாய்ச் சுனைய பகுவாய்த் தேரை**
**தட்டைப் பறையின் கறங்கும் நாடன்**
**தொல்லைத் திங்கள் நெடுவெண் நிலவின்**
**மணந்தனன் மன்நெடுந் தோளே**
**இன்றும் முல்லை முகைநா றும்மே"1 குறுந். பா.எ 193**

என்னும் குறுந்தொகைப் பாடல் குறிப்பிடுகின்றது. இப்பாடலில், தோழி! கள்ளினைப் பெய்துவைத்த நீலக்குப்பிகளைப் போன்ற சுருங்கிய வாயையுடைய சுனையிடத்து உன்னதாகிய பிளந்த வாயையுடைய தலைவன் களவுக்காளமாகிய முந்தைய மாதத்தில் நெடிய வெண்ணிலா ஒளியிலே என் நீண்ட தோள்களைத் தழுவினான். அதனால் இப்பொழுதும் அவன் மேனியில் அணிந்திருந்த முல்லை முகையின் மணம் என் தோள்களிலே கமழும். தலைவன் களவுக் காலத்துச் செய்த தலையளி காரணமாக என்மேனி நலம் குன்றாது அமைந்தது என்றாள்.

இதன் சாயல் கண்ணதாசன் கவிதையில்,

**"அலைகடல் ஆரவாரம்**
**அவையெங்கள் காதல் கீதம்!**
**மலைமுக டடையும் மேகம்**
**மணவிழாப் பந்தற் கோலம்!**
**நிலைதொறும் நீரின் தேக்கம்**
**நெஞ்சத்தில் வார்த்த தீர்த்தம்**
**இலைமலர் கனிக ளெல்லாம்**
**எமக்கவன் மணிமுத்தாரம்!2 - க.க.தொகுதி 5 ப 71**

என்ற பாடலடிகளில், தலைவி பாங்கியிடம் கடல் அலையின் ஆரவாரம்தான் எங்கள் இருவரின் காதல் கீதங்கள் என்றும், மலைமுடைத் தொடும் மேகக் கூட்டம்தான் எங்கள் மணவிழாப் பந்தற் கோலம் என்றும், மழையால் வரும் நீரின் தேக்கம் நெஞ்சில் மகிழ்ச்சி தரும் தீர்த்த நீர் என்றும், இலைமலர் கனிகளெல்லாம் உள்ளது போல், வாழ்வில் எல்லாம் எனக்கு என் காதலன்தான் மணி முத்தாரம் போல் திகழ்ந்தான். இதனால் தலைவி திருமணத்திற்கு முன் தலைவனின் நினைவுடன் வருந்தாமல் இருந்தேன் என்று கூறுகிறாள்.

**ஐங்குறுநூறு**

தலைவி மீது அன்பு கொண்ட தலைவனைப் தோழி வாழ்த்துதலாகும். இதனை,

**"எக்கர் ஞாழல் பூவின் அன்ன**
**கணங்குவளர் இளமுலை மடந்தைக்கு**

 ISSN: 2320-4842
Vol-18 No. 04 October–December 2024

**அணங்குவளர்த்து அகறல் வல்லா தீமோ"3 - ஐங்குறு. பா.எ 149**

என்னும் ஐங்குறுநூற்றுப் பாடலில் தலைவியைத் திருமணம் செய்துகொண்ட தலைவன் தலைவியோடு பள்ளியிடத்து இருந்துழித் தோழி பெருமானே! மணற்பரப்பில் நிற்கும் ஞாழல் மரத்தினது பொன்னிறப் பூப்போலும் நிறமுடைய மேல்படரும் இளமை உடைய முலையையும், மடப்பத்தையும் உடைய தலைவியோடு களவுக்கை நெகிழாது கூடிக் களித்திருந்து அவளது பெண்மை அழகினைப் பெருகச் செய்து அவளை எஞ்ஞான்றும் பிரியாது நீடுவாழ்க என்று வாழ்த்துவதை கண்ணதாசன் கவிதையில் காணும்போது,

**"பாதாதி கேசமும் சீரான நாயகன்**
**பணிக்கென்று துணைவி வாழ்க!**
**படுவதொரு துயரெனினும் வருவதொரு சுகமெனினும்**
**பாதியாய் துணைவன் வாழ்க!**
**தாய்வீடு விட்டபின் தன்வீடு தாய்வீடென்**
**றெண்ணியே தலைவி வாழ்க!**
**சமகால யோகமிது வெகுகால யாகமென**
**சம்சாரம் இனிது வாழ்க!"4 - க.க.க தொகுதி 7 ப 332**

என்னும் வரிகளில் பாதம் முதல் தலைவரை ஒருசீராய் அமைந்த சீரான நாயகனின் பணிக்கென்று வந்த தலைவியே வாழ்க. இல்வாழ்க்கையில் துயரம் வந்தாலும் சுகம் நடந்தாலும் தலைவியும், தலைவனும் பாதியாய் பங்கிட்டுக் கொள்ளும் துணைவன் வாழ்க. தாய்வீட்டை விடுத்து தலைவன் வீடு வந்தடையும் தலைவி, தன்வீடே தாய்வீடென்று எண்ணி வாழும் தலைவியுடன், தலைவன் நீடு வாழ்க என்றும், இருவருக்கும் யோகம் பெரும் நேரம் என்றும், வெகுகால யாகம் இருந்து பெற்ற இல்வாழ்க்கையை இனிது வாழ்க! என்று தலைவன் தலைவியைத் தோழி வாழ்த்துவதாக அமைந்துள்ளது இப்பாடல்.

**பரிபாடல்**

அகமும் புறமும் கலந்து பாடப்பட்ட பரிபாடல் என்ற சங்க இலக்கிய நூலில் பக்தி சுவை நிரம்பியுள்ளது. பக்திப் பாசுரமாக்க் காணப்படும் பாடல்களில் இறைவன் இயற்கை உணர்வில் படைக்கப்பட்டுள்ளான் என்பதை,

**"வெஞ்சுடர் ஒளியும் நீ!**
**திங்களுள் அளியும் நீ!**
**அனைத்தும் நீ!**
**அனைத்தின் உட்பொருளும் நீ!"5 பரிபாடல் பா.எ 3 வ 67 - 68**

என்ற அடிகள் புலப்படுத்துகின்றன. எல்லாவற்றிலும் இறைவன் நீக்கமற நிறைந்துள்ளான் என்பதை சூரியனில் ஒளியாகவும், நிலவில் குளிராகவும் இறைவன் இருப்பதை அறியமுடிகிறது. இப்பாடலடிகளின் தாக்கத்தைக் கவிஞர் கண்ணதாசனின் கவிதைகளில் காணமுடிகிறது.

**“ஏழ்கடல் வையம் நீ**

**ஏழிசை நாதம் நீ**

**ஏழ் தலைமுறையும் உன்னிடமே”6 - க.க தொகுதி 6 ப 80**

என்ற பாடலடிகள் இவ்வுலகில் உள்ள ஏழுகடலுள்ளும், ஏழு இசைகளிலும் இறைவன் இருக்கிறான். இவற்றால் ஏழு தலைமுறையாக நாம் உருவானாலும் இறைவன் எப்பொழுதுமே நிலைபெற்றிருக்கிறான் என்றும், இறைவன் இயற்கையோடு இணைந்திருக்கிறான் என்பதையும் எடுத்தியம்புகிறார்.

**புறநானூறு**

சங்க இலக்கிய நூலான புறநானூற்றில் சடையில் கங்கையும், கையில் சிவதனுசும், ஒரு பாதியிலே உமையம்மையும் கொண்டவனாக இமயத்தின் உச்சியில் சிவபெருமான் வீற்றிருப்பதைப் புறநானூறு,

**“பெண்ணுரு ஒரு திறன் ஆகின்று**

**அவ்வுருத் தன்னுள் அடக்கிக் கரக்கினும் காரக்கும்”7 - புறம் பா.எ 1**

என்னும் அடிகள் போற்றுகின்றன. சிவனின் அழகிய குணங்களை சங்கப் பாடல்கள் பொதுவாகக் கூற. கண்ணதாசனோ தம் கவிதையில் சக்தியைப் புகழ்கிறார். சிவசக்தி தத்துவத்தைக் கூறும்போது சக்தியின்றி சிவமில்லை என்பதை உணர்த்துகிறார்.

**“ஆதிசிவன் உனை நீங்கின் அசைவதில்லை**

**அகிலமெலாம் உனையல்லாமல் இயக்கமில்லை”8 - க.க.தொகுதி 7 ப 117**

இப்புவியுலகின் தொடக்கமாக இருப்பவன் இறைவன். அவனின்றி எப்பொருளின் அசைவும், இயக்கமும் இவ்வுலகில் இல்லை என்பது ஞான இறைநெறி.

மேலும் ‘திருமண மந்திரம்’ என்ற ஒரு கவிதையில் திருமணம் முடிந்து இல்லற வாழ்க்கையைத் தொடங்கப் போகும் தம்பதிகளைத் தன் அழகிய சொற்பயன்பாட்டின் மூலம் தெளிவாக்குகிறார். இந்த வாழ்க்கைக்குத் துணையாக வருவது சிவசக்தி தத்துவமே என்பதை,

**“சக்தி ஒரு பாதியாய்**

**சிவமும் ஒரு பாதியாய்**

**தர்மத்தில் இணைந்து வாழ்வோம்”9 - க.க.தொகுதி 7 ப 332**

என்னும் கவிதை வரிகளில் இறைநெறிக் கோட்பாட்டை தெளிவுப்படுத்துகிறார்.

**திருமுருகாற்றுப்படை**

சங்க இலக்கியத்தில் முருகனை வாழ்த்தி வணங்கும் தனிநெடும் பாடலாக விளங்குவது திருமுருகாற்றுப்படையாகும். திருமுருகாற்றுப்படை குறிஞ்சிநில மக்களின் தோற்றத்தையும், முருகப்பெருமான் ஆறுபடை வீடுகளில் எழுந்தருளியுள்ளதையும், ஆறுமுகங்கள் மற்றும் பன்னிரு கைகளின் தொழில்களையும் மற்றும் பிற கூறுகளையும் விளக்குகிறது.

திருச்சீரலைவாயில் செம்மாந்து காட்சி தரும் முருகனின் திருக்கரங்களின் சிறப்புகளைக் கூறுகையில்,

**"விண்செலல் மரபின் ஐயர்க் கேந்தியது**
**ஒருகை உக்கஞ் சேர்த்தியது ஒருகை"**10 **- திருமுருகு. பா.வ 107 - 108**

என நக்கீரர் பாடியுள்ளது போலக் கவிஞர் கண்ணதாசனும் தனது கவிதைகளில், ரிஷிகளுக்கும் முனிவர்களுக்கும் பாதுகாவலாக விளங்கும் திருச்செந்தூர் முருகப்பெருமானின் அழகை,

**"அயமென ஓர்கையும்**
**அடிகாட்டி ஓர் கையும்**
**அழகுதிகழ் வைரமணியும்**
**நின்ற கோலத்திலே**
**நிமிர்ந்த மார்பகத்திலே**
**நிழலாடும் கருணை நிதியும்**
**.........................................**
**இன்று கண்டேன், அதை**
**இயம்ப என் தமிழிலே**
**எழில் மாடக் கந்தபுரி**
**மணிக்கோவில் கொண்ட என்**
**இதயமே கந்தவேளே"**11 **க.க.தொகுதி 7 ப 76 - 77**

என்று எழுதியுள்ளார். மேலும் திருமுருகாற்றுப்படையில், பலரும் புகழக் கூடிய தேவர்களும் பழனிக்கு வருகை தந்தனர் என்பதை நக்கீரர்,

**"நாற்பெருந் தெய்வத்து நன்னகர் நிலைஇய**
**உலகங் காக்கும் ஒன்றுபுரி கொள்கைப்**
**பலர்புகழ் மூவருந் தலைவராக**
**…………………………………**
**அந்தரக் கொட்பினர் வந்துடன் காண"**12 **- திருமுருகு. பா.வ 160 - 174**

என்ற வரிகளில் திருமால், உத்திரன், இந்திரன் எனும் மூன்று பெருந்தெய்வங்களும் 'பலர் புகழ் மூவர்' எனப்பட்டனர். இவர்களுடன் மூன்று பெருந்தெய்வங்களும் பழனியை நாடி வந்தனர் என்று கூறுகிறார். இந்நிகழ்வுடன் ஒப்பிட்டுக் கவியரசர் கண்ணதாசனும் தனது கவிதையில்,

**"வயதுசென்றவர் இளைஞரென்பவர் யாவரும் – அந்த**
**வானுலகத்துத் தேவர் தம்மொடு மூவரும்**
**வயலில் மீன்கள் குதிக்கும்**
**இந்தக் கழனியை – நாடி**
**வந்து நிற்பார் வணங்க நிற்பார்**
**பழனியை"**13 **- க.க தொகுதி 7 ப 79**

என்று புகழ்கிறார். நவீன காலத்துக் கவிஞர் கண்ணதாசன் என்நாலும் மூன்று பெருந்தெய்வங்களுடன், இளைஞர்களும் பழனியை நாடி வருவதாகச் சொற்கவி புனைந்துள்ளார்.

**கவிஞர் கண்ணதாசனின் கவிதைகளில் புறத்திணை**

சங்க இலக்கியங்களில் புறம் என்று சொல்லப்படுவது ஆட்சியின் மாட்சி, புகழ், ஈகை, நீதி, கொடை முதலிய அனைத்தும் புறம் எனப்படும். கண்ணதாசனின் கவிதைகளில் வெளிப்படும் புறத்திணை பற்றிய செய்திகளைக் காணும்போது அவைகள் சங்க இலக்கியங்களோடு பொருந்தி வருவதைக் காணமுடிகிறது. புறத்திணைகளைப் பற்றிப் பேசும் கண்ணதாசன் கவிதைகளில் காணும்போது, சூடும் பூவால் பெயர் பெறும் திணை வஞ்சி, வஞ்சிக்கு அடிப்படைக் காரணம் மண்ணாசையே ஆகும். **"ஒரு வேந்தன் பகையரசன் நாட்டைக் கொற்றங் காரணமாகக் கைப்பற்றக் கருதியது வஞ்சித்திணை எனப்படுகிறது."**14 **- புறப்பொருள் வெண்பாமாலை ப 41** வஞ்சித்திணையில் அமையும் ஒரு துறை துணைவஞ்சி ஆகும்.

புறநானூற்றில்,

கோப்பெருஞ்சோழனின் ஆட்சியின் போது அவனது புதல்வர்கள் சிற்றினத்தாரின் சேர்க்கையால் அறிவுப் பேதுற்று அவன்மேல் பகைகொண்டு போரிட முனைந்தார். சோழனும் கோபம் கொண்டு போரிடத் துணிந்தான். இதைக் கண்ட புல்லாற்றூர் எயிற்றனார் என்னும் புலவர் **"உடன் மறவொன்றியைக் கைவிடுக, உயிருக்கு உறுதி பயக்கும் ஒழுகலாற்றிற் செல்லுக" – தி.சு.நடராஜன்., கவிதை எனும் மொழி ப 73** என்று அறிவித்து சந்து செய்வித்தார்.

**"............பழியெழ் சுவையே**
**அதனால் ஒழிகதில் அத்தை, நின் மறனே!வல் விரைந்து**
**எழுமதி, வாழ்க நின் உள்ளமே! அழிந்தோர்க்கு**
**ஏமம் ஆகும் நின் தாள் நிழல் மயங்காது**
**செய்தல் வேண்டுமால் நன்றோ"**15 **- புறம்.ப 554**

இப்பாடலில். சோழமன்னனே! உன் புதல்வர்களுடன் போரிட்டால் உனக்குக் கிடைப்பது பழி மட்டுமே. அதனால் போர் செய்யும் எண்ணத்தை கைவிடுக என்று சுட்டிக்காட்டியுள்ளார். இதைப் போலவே கண்ணதாசனும்,

**"பதினெட்டு வயதான பாலகர் தம்**
**பசுங்குருதி நீராட அமெரிக்காவின்**
**பதினெட்டு வயதான பாலகர்கள்**
**படையாகப் போகின்றார்!**
**நாகரிகனம் படும்பாட்டைக் கேளீர்! (இந்த(ச்)**
**சதிசாய, சமர்ஓய உயிர்கள் வாழத்**

**தர்மத்தின் பெயராலே முழக்கஞ் செய்வீர்!"16 - க.க.தொகுதி 4 ப 110**

என்று வியட்நாமை அமெரிக்கப் படைகள் தாக்கியபோது போரின் அழிவுகள் குறித்து வருந்தினர். ஏழை நாடான வியட்நாமை அழிக்க முனைந்த அமெரிக்காவைக் கண்டிக்கும் பங்கும், போர் முறைகள் ஒழிய உலக மக்களுக்கு அவர் விடுக்கும் அறைகூவலும் இவர் கவிதையில் தெளிவாகத் தென்படுகிறது.

பொருளாதாரமும் சமுதாயத்தில் ஆக்கப்பட்ட பொருட்கள் அனைத்தும் ஒரு பக்கம் சாய்ந்து விடாமல் 'எல்லாரும் எல்லாமும் பெற வேண்டும்' என்ற பொதுவுடைமை நோக்கில் எழுதப்பட்டது. 'பொதுமை காண்போம்' என்னும் கவிதை, அக்கவிதையில் பொதுமை சொற்பாட்டைக் காண்பதற்கு அறவழியைக் காட்டுகிறார். கண்ணதாசன் வாழ்ந்த காலத்தில் மக்களே மன்னர்களாயிருப்பதால் மக்களின் ஆற்றலை நல்வழிப்படுத்தி அறவழியில் வழிநடத்துதலே நாடு வளம் பெறும் என்பதைப் தமது பல பாடல்களில் வலியுறுத்துகிறார் கவிஞர்.

## முடிவுரை

சங்க இலக்கியத்தில் காணப்படும் அகப்பொருள் கருத்துக்கள், தெய்வ வழிபாடுகள், புறப்பொருள் கருத்துக்கள் போன்ற அனைத்தையும் கவிஞர் கண்ணதாசன் பாடல்களில் இருப்பதைக் காணமுடிகிறது. தலைவன் தலைவியின் அன்பின் மேன்மை, பழனிக்கு வருகை புரியும் தேவர்கள் மற்றும் போரின் அழிவைக் குறிப்பிட்டு அதன்விளைவுகளால் வருகின்ற தீமையை சங்க இலக்கியத்தின் சாயலில் கவித்துவ வடிவிலும் விளக்கியிருப்பது மக்கள் மனங்களில் நீங்கா இடம் பெற்ற சிந்தனைகளாகும்.

## பார்வை நூல்கள்

1. அ. தட்சிணாமூர்த்தி. பரிமணம் அ.மா (த.ப.ஆ), கு.வெ. பாலசுப்பிரமணியன். ஐங்குறுநூறு (மூலமும் உரையும்), நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், 41-பி, சிட்கோ இண்டஸ்டிரியஸ் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை – 98, 2007
2. கமலா முருகன். தமிழ் இலக்கிய வரலாறு. சீதா பதிப்பகம், சென்னை, பதிப்பு – 2010.
3. கவிஞர் கண்ணதாசன். கண்ணதாசன் கவிதைகள். வானதி பதிப்பகம், சென்னை, பதிப்பு – 1989.
4. கவிஞர் கண்ணதாசன், கவிஞர் கண்ணதாசன் கவிதைகள் சென்னை, பாகம் – 4, பதிப்பு – 2013, பாகம் – 5, பதிப்பு – 2015, பாகம் – 6, பதிப்பு – 2016.
5. கவிஞர் கண்ணதாசன், கண்ணதாசன் கவிதைகள், சென்னை, தொகுதி – 4, பதிப்பு – 1971, தொகுதி – 5, பதிப்பு – 1972, தொகுதி – 6, பதிப்பு -1976, தொகுதி - 7, பதிப்பு – 1982.
6. சு.அருளம்பகம். திருமுருகாற்றுப்படை ஆராய்ச்சியுரை, ஸ்ரீ சண்முகநாத அச்சுஇயந்திர சாலை , யாழ்ப்பாணம், பதிப்பு, 1937.

**7.**மு. சண்முகம்பிள்ளை. குறுந்தொகை**,** தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு, பதிப்பு – 1985.

8.மு. வரதராசனார். தமிழ்இலக்கியவரலாறு**,** மணிவாசகர் பதிப்பகம், சென்னை, பதிப்பு – 1994.

**9.** வ.த. இராமசுப்பிரமணியன். புறநானூறு மூலமும் தெளிவுரையும்**.** திருமகள் நிலையம், சென்னை, பதிப்பு – 2000.